## மாவட்ட உரிமையியல் நீதிமன்றம், மன்னார்குடி

## O.S. No.45/2020

2026 –ம் ஆண்டு மார்ச் மாதம் 23 –ம் நாள் வாதி தரப்பு சாட்சியின் வா.சா.1 வாக்குமூலம் 1969ம் ஆண்டு இந்திய உறுதிமொழி சட்டம் விதிமுறைகளின் ஏற்பாட்டின்படி இந்நீதிமன்றத்தால் அதிகாரம் அளிக்கப்பட்ட அலுவலரான திரு. R. சீனிவாசன், Bench Clerk (Gr–III) அவர்களால் சாட்சியிடம் சத்தியபிரமாணம் செய்யப்பட்டது.

**நாள் : 23.03.2026**

| | | | | | |
|---|---|---|---|---|---|
| பெயர் | : | திருமதி. சித்ரா (PW–1) | வயது | : | 56/2026 |
| க/த பெயர் | : | திரு. நடராஜன் | தொழில் | : | வீட்டு குடித்தனம் |
| முகவரி | | மன்னார்குடி | வட்டம் | : | மன்னார்குடி |

**5 முதல் 7 பிரதிவாதிகள் தரப்பில் குறுக்கு விசாரணை**

1) என்ன பரிகாரம் வேண்டி இந்த வழக்கு தாக்கல் செய்துள்ளேன் என்றால் எனக்கு சொந்தமான சொத்திற்கு மோசடியாக ஏற்படுத்திய ஆவணங்கள் செல்லாது என்று விளம்புகை செய்ய வேண்டி வழக்கை தாக்கல் செய்துள்ளேன். தாவா சொத்து குறித்து ஏற்படுத்தப்பட்ட ஆவணங்கள் பற்றிய விபரம் எனக்கு எப்போது தெரியவந்தது என்றால் 2020 இல் தெரியவந்தது. 5 முதல் 7 பிரதிவாதிகளுக்கு எதிராக நான் எந்தவித பரிகாரமும் கோரவில்லை என்றால் சரிதான்.
2) ஆவண எண்.3758/2020 கிரய ஆவணம் சட்டப்படி செல்லாது என்பதற்கான எந்தவித ஆவணத்தையும் தாக்கல் செய்யவில்லை என்றால் சரியல்ல. 5 முதல் 7 பிரதிவாதிகள் இந்த வழக்கிற்கு அவசியம் இல்லாத தரப்பினர்கள் என்பதால் இந்த வழக்கு தள்ளுபடி செய்யவேண்டியது என்றால் சரியல்ல.

Taken down by me in Open Court and read over/interpreted to the witness and admitted by him/her to be correct

NATARAJAN AZHAGESAN

Digitally signed by NATARAJAN AZHAGESAN
DN: cn=NATARAJAN AZHAGESAN, ou=THANJAVUR, o=TAMIL NADU STATE JUDICIAL SERVICE, st=Tamil Nadu, c=IN
Date: 2026.03.24 17:46:34 +0530

District Munsif
Mannargudi.